# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,924—1970 සැප්තැම්බර් 18 වැනි සිකුරාදා—1970.9.18

14,924 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்வதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 851 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. . | 861 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | . |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் . | 863 | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. | 864 | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | — |


### பதவிகள் — வெற்றிடம்

**" இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "**

*1. படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

*2. சேவைக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

*3. நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் விதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவிலத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(1) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க. பொ. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறு

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

*அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1970 ம் ஆண்டு யூன் மீ 2 ந் உ.*

*எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

வதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினுல், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப்பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாகவிருப்பவராகும்.

6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பன வற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினுல் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவைக் ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனுல் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையினம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.

---

## இலங்கைச் சுற்றுப் பயணச் சபை

இலங்கைச் சுற்றுப்பயணச் சபையிலுள்ள கீழ்க்காணும் பதவிகளுக்கு இலங்கையரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

I. உதவிப் பணிப்பாளர் (கூடுமிடங்கள்).—சம்பள அளவுத் திட்டம் : மாதமொன்றுக்கு ரூபா 600—10 × 40 ; 4 × 50— ரூபா 1,200 (அனைத்துமுட்பட).

தகைமைகள்.—திட்டமிடல், மதிப்பிடல், செயற்படுத்தல், முகாமைகளை உள்ளடக்கும் திட்டங்களைக் கையாளும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் 5 ஆண்டு நிருவாக அனுபவத்துடன், பொருளியல், வர்த்தகவியல், பொறியியல் அல்லது ஏற்ற பிற பாடத்திற் சிறப்புப் பட்டதாரி அல்லது தொழினுட்பத்திலும் முகாமையிலும் ஆகக்குறைந்தது 10 ஆண்டு அனுபவத்துடன் அங்கீகரித்த பொறியியற் றகைமைகளைப் பெற்றுள்ள பதவிநாடி.

தெரிவு செய்யப்பட்ட பகுதிகளிலுள்ள தேசிய விடுமுறையைக் கூடுமிடங்களின் அபிவிருத்தியைக் கையாளல், இப்பதவிக் கடமைகளுள்ளடங்கும். அமைப்பு வேலைகள்—கட்டிடங்கள், இயற்கைக் காட்சிகள், பொதுத்தேவைகளை அளித்தல், முதலான—அனைத்தையும் நிகழ்ச்சித் திட்டமிடல், குறித்த திணைக்களங்களுடன் இணைப்பு, வசதியேற்பாட்டுக்காகத் தனியார் துறையோடு இணைப்பு ஆகியன பணிகளுட் சிலவாகும். பொதுமக்கள் தொடர்பின் முகாமையிலான அனுபவம் சிறப்புத் தகைமையாக வமையும்.

மேலதிகத் தகைமைகள்.—கீழ்வருவன மேலதிகத் தகைமைகளாகக் கருதப்படும் :

(அ) இலங்கை வரலாற்று, பண்பாடு, பொருளாதார அறிவு ;

(ஆ) கீழ்வரும் பிற நாட்டு மொழியொன்றிலோ, அதற்கு மேற்பட்டவற்றிலோ பணியாற்றத்தக்க அறிவு—பிராஞ்சு, ஜர்மன், ஸ்பானிஷ், இத்தாலிய, இரஷ்ய ;

(இ) பயணத்திலும் பகிரங்கப்படுத்தலிலும் பொதுமக்கள் தொடர்புப் பணியிலும் அனுபவம் ;

(ஈ) ஆழ்ந்த ஆங்கில அறிவு.

வயது.—1970, ஒற்ரூபர் மாதம் 1 ஆந் தேதியன்று 25 க்கும் 40 க்கு மிடையிலான வயது.

II. புள்ளிவிவர அலுவலர்.—சம்பள அளவுத்திட்டம் : மாதமொன்றுக்கு ரூபா 400—16 × 25—ரூபா 800 (அனைத்துமுட்பட)

தகைமைகள்.—அங்கீகரித்த பல்கலைக் கழகத்திடமிருந்து கீழ்வரும் பாடங்களுள் ஏதேனுமொன்றையுங் கொண்ட பட்டம்—கணிதவியல், புள்ளிவிவரவியல், பொருளியல், சமூகவியல். புள்ளிவிவரத் தரவுகளைப் பாகுபடுத்தலிலும் அறிக்கைகளைத் தயாரிப்பதிலுமுள்ள அனுபவம் மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.

வயது.—1970, ஒற்ரூபர் மாதம் 1 ஆந் தேதியன்று 22 க்கும் 35 க்குமிடையிலான வயது.

குறிப்பு.—வேண்டியவிடத்து, வெளிக்களப் பணியையும் இரவுப் பணியையும் விழுமை நாட்களனைத்திலும் பணியையும் மேற்கொள்வதற்குப் பதவிநாடிகள் தயாராயிருத்தல் வேண்டும்.

III. பம்பி இயக்குநர்.—சம்பள அளவுத்திட்டம் : மாதமொன்றுக்கு ரூபா 265—11 × 10 ; 9 × 15 — ரூபா 510 (அனைத்துமுட்பட)

தகைமைகள் :

(அ) 50 குதிரை வேகம் அல்லது அதற்கு மேலான பம்பிப் பொறிகளையும் நீர் வழங்கற்றிட்டங்களிற் பயன்படுத்தப்படும் பிற பொறிகளையும் இயக்கலிலும் பேணலிலும் ஆகக்குறைந்தது 6 ஆண்டு அனுபவத்தைப் பெற்றவராகவும், பம்பிப் பொறிகளின் குறைபாடுகளைக் கண்டுபிடிக்க வல்லவராகவும் சிறிய பழுதுபார்த்தல்களையும் சீராக்கல்களையும் செய்யவல்லவராகவும் இருத்தல் வேண்டும் ;

(ஆ) சம்பவக் குறிப்பேட்டை வாசிக்கவும், எழுதவும், பேணவும் வல்லவராயிருத்தல் வேண்டும்.

வயது.—1970, ஒற்றோபர் மாதம் 1 ஆந் தேதியன்று 22 க்கும் 35 க்குமிடையிலான வயது.

IV. பம்பி உதவி இயக்குநர்.—சம்பள அளவுத் திட்டம் :
மாதமொன்றுக்கு : ரூபா 240 — 9 × 10 ; 7 × 15 — ரூபா 435 (அனைத்துமுட்பட)

தகைமைகள் :

(அ) 25 குதிரை வேகம் அல்லது அதற்கு மேலான பம்பிப் பொறிகளையும் நீர் வழங்கற்றிட்டங்களிற் பயன்படுத்தப்படும் பிற பொறிகளையும் இயக்குவதிலும் பேணுதலிலும் ஆகக் குறைந்தது 3 ஆண்டு அனுபவத்தைப் பெற்றவராகவும், பம்பிப் பொறி நுட்பத்தில் அடிப்படையான அறிவுடையவராகவும், உறுப்புகளை அடையாளங் காண வல்லவராகவுமிருத்தல் வேண்டும் ;

(ஆ) சம்பவக் குறிப்பேட்டை வாசிக்கவும், எழுதவும், பேணவும் வல்லவராகவிருத்தல் வேண்டும்.

வயது.—1970, ஒற்றோபர் மாதம் 1 ஆந் தேதியன்று 22 க்கும் 35 க்குமிடையிலான வயது.

குறிப்பு.—பம்பி இயக்குநர், பம்பி உதவி இயக்குநர் பதவிகள் குறித்து, அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில் அல்லது பொறியியல் நிறுவனமொன்றில் அனுபவமுடைய பதவி நாடிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**இலங்கைச் சுற்றுப்பயணச் சபையின் வேலையாளருக்கான சலுகைகள்**

இச்சபையின் வேலையாளர்கள் சம்பந்தப்பட்டவிடத்து, மேற்காணும் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள தகைமைகளும் வயதெல்லையும் பொருத்தமாகத் தளர்த்தப்படும்.

மேற்காணும் பதவிகளுக்குப் பொருத்தமான வேலை நிபந்தனைகள் :

(i) தெரிவு செய்யப்படும் பதவி நாடி :—

(அ) மூன்றாண்டுகளுக்குத் தகுதிகாண் நிலையிலிருப்பர் ;

(ஆ) அவரின் உடலுறுதி குறித்து மருத்துவச் சோதனையிற் சித்தியெய்துமாறு வேண்டப்படுவர்.

ஏற்கெனவே அரசாங்க சேவையில் அல்லது நியதிக் கட்ட முறையான கூட்டுத்தாபனமொன்றிலுள்ளவர் சம்பந்தப்பட்ட மட்டில், இந்நிபந்தனை பொருத்தமாகத் திருத்தியமைக்கப்படக்கூடும்.

(ii) தெரிவு செய்யப்படும் பதவி நாடி :—

(அ) ஏற்கெனவே ஆக்கப்பட்டுள்ள அல்லது இனிமேல் ஆக்கப்படவுள்ள சபையின் விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையுமாறும் ;

(ஆ) குறித்த காலத்திற்குள் சபையினால் விதிக்கப்படும் தரம் வரை சிங்களத்திற் தேர்ச்சி பெறுமாறும் ;

(இ) வேலையாளர் சகாயநிதிக்கு அல்லது சபைச் சகாய நிதியேற்படுத்தப்படுங்கால் அந்நிதிக்கு உதவுமாறும் ;

(ஈ) சபையினால் கோரப்படும் பிணையைக் கட்டுமாறும்,
வேண்டப்படுவர்.

(iii) அரசாங்கத் திணைக்களங்களில் அல்லது கூட்டுத்தாபனங்களிலுள்ள அலுவலர்கள், தங்களின் விண்ணப்பங்களை தங்களின் திணைக்கள அல்லது கூட்டுத்தாபனத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். அவ்வலுவலர்கள் தெரிவு செய்யப்படின், அவர்களை விடுவிக்கவியலுமாவெனத் திணைக்கள அல்லது கூட்டுத்தாபனத் தலைவர்கள் குறிப்பிடல் வேண்டும்.

(iv) பூரண விவரங்களைக் கொண்ட விண்ணப்பங்கள், இடது பக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவியைக் குறிப்பிடும் பதிவு செய்யப்பட்ட உறையினுள், 1970, ஒற்றோபர் மாதம் 10 ஆந் தேதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ சென்றடையத் தக்கவாறு, கொழும்பு, அ. பெ. இல. 1504, இலங்கைச் சுற்றுப்பயணச் சபைத் தலைவர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். சான்றிதழ்களின் பிரதிகள் மாத்திரமே விண்ணப்பங்களுடன் அனுப்பப்படல் வேண்டும்.

எவ்வகையிலும் ஆதரவு தேடல் தகைமையிழப்பாகும்.

தலைவர்,
இலங்கைச் சுற்றுப்பயணச் சபை.

கொழும்பு,
1970 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 10 ந் உ.

9-756—18.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,924

---

எனதெண் : பொ/நி/5/90

**கல்வி அமைச்சு**

**பதவி : I ம் வகுப்புத் தச்சர்**

கல்வி அமைச்சின் கீழுள்ள தொழில் நுட்பநிலையங்களில் I ம் வகுப்பு தச்சர் பதவிகளுக்கு கீழ்க்காணும் நிபந்தனைகளைப் பெற்றுள்ள அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவமுறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு " நிரந்தரக் காரியதரிசி (பொது நிர்வாகக் கிளை), கல்வி அமைச்சு, மலாய வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு 1970 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 5 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும். காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் " I ம் வகுப்புத் தச்சர் பதவி " எனத் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

குறிப்பு.—15.8.69 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி அறிவித்தலுக்கிணங்க விண்ணப்பித்தவர்கள் திரும்ப விண்ணப்பிக்க வேண்டும்.

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்

(i) இப்பதவி நிரந்தரமானது. நியமதாரி இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் அந்தஸ்து 7.2.64 ந் திகதிய 633 ம் இலக்கத் திறைசேரி சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கமையும். நியமதாரி மாதாந்தச் சம்பள அளவுத் திட்டத்தில் வைக்கப்பட்டதும் இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் அந்தஸ்து வழங்கப்படும்வரை அரசினர் சேவை சேமலாப நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் அந்தஸ்து வழங்கப்பட்டதும் விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும்.

(ii) நியமதாரி, அரசகரும மொழிச் சட்டத்தின் நோக்கங்களின் பொருட்டு, புதிய முறைப்படி நியமிக்கப்படுவராயின் பரீட்சார்த்த காலம் 3 வருடங்களாகும்.

(iii) அரசினரின் கீழ் ஒரு நிரந்தர பதவியை வகிப்பவர் நியமிக்கப்படுதற்குத் தெரிவு செய்யப்படின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு அவர் பதில் கடமை புரியும் அல்லது பரீட்சார்த்த முறையில் நியமிக்கப்படுவார்.

(iv) நியமதாரி தீவின் எப்பகுதியிலும் கடமை புரிய வேண்டும்.

(v) தெரிவு ஒரு நேர்முகப் பரீட்சை, ஒரு செயல்முறைப் பரீட்சை ஆகியவை மூலம் நடாத்தப்படும்.

3. சம்பளமும் சகாயப் படிகளும்

(அ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள்ளும் கொழும்பு மாநகரசபை எல்லையிலிருந்து 5 மைல் சுற்றுவட்டுக்குள்ளும் அல்லது எந்திரவியல் நிலையமாகத் திறைசேரியால் அங்கீகரிக்கப்பட்ட நிலையங்களில் சேவை புரிபவர்களுக்கு :—

ஒன்று திரட்டிய சம்பள அளவுத்திட்டம்—

முதல் ஆறு மாத காலத்துக்கு நாளொன்றுக்கு ரூபா 10.70 வீதமும் பின்னர் ரூபா 3,240—12 × 60—3,960 வருடாந்தம்.

(ஆ) எந்திரவியல் நிலையங்களாக திறைசேரியால் அங்கீகரிக்கப்படாதவையும் வெளியூர்களில் உள்ளவையுமான நிலையங்களில் சேவை புரிபவர்களுக்கு :—

ஒன்றுதிரட்டிய சம்பள அளவுத்திட்டம்—

முதல் ஆறு மாத காலத்துக்கு நாளொன்றுக்கு ரூபா 9.70 வீதமும் பின்னர் ரூபா 3,060—9 × 60—3,600 வருடாந்தம்.
சீவன சகாயப்படி, விசேட சீவன சகாயப்படி, வாடகைப்படி ஆகியவை அரசினர் விதிகளுக்கமையக் கொடுபடும்.

4. தேவைப்படும் தகைமைகள்

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதாகத் திருப்திகரமான சான்று காட்ட வேண்டும் :—

(அ) 25 வயதுக்குக் குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர்களுக்கு அமையாது.

(ஆ) (i) வாசிக்க, எழுதக் கூடியவராய் இருக்க வேண்டும்.

(ii) 1/32" வரையறையுள்ள அளவுத் திட்டங்களை விளங்கிக் கொள்ளக்கூடியவராய் இருக்க வேண்டும்.

(iii) வரைதல்களை விளங்கிக் கொள்ளக்கூடியவராய் இருக்க வேண்டும்.

(iv) இத்தொழிலுக்குத் தேவையான கருவிகளின் பெயர்கள் உபயோகம், பேணல் முறை ஆகியவை பற்றி நன்று அறிந்திருக்க வேண்டும்.

(v) தான் ஈடுபட இருக்கும் தச்சுவேலையையும் இணைப்பு வேலையையும் பற்றி நன்குய் அறிந்திருப்பதுடன் அத்தகைய எவ்வேலையையும் செய்யக்கூடியவராய் இருத்தல் வேண்டும்.

(இ) தொழில் பயில்வோனாக 10 வருட சேவை புரிந்திருக்க வேண்டும், இதில் குறைந்தபட்சம் 6 வருடம் 1 ம் வகுப்புத் தொழில் பயில்வோராக (தச்சர்) இருக்க வேண்டும். (சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்).

குறிப்பு.—ஐக்கிய இராச்சிய யுத்த களங்களில் தொழில் பயில்வோராக புரிந்த சேவை அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிலையத்தில் புரிந்த சேவையாக ஏற்றுக்கொள்ளப்படும்.

(ஈ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

5. அபேட்சகர்கள் வேண்டப்படும் நேரத்தில் பின்வரும் சாதனங்களில் எதனையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) ஆகக்கூடிய கல்வித் தகைமைப் பத்திரம்.

(ஆ) பிறப்புச்சாட்சிப் பத்திரம்.

(இ) தொழில் தகைமைப் பத்திரங்களும் தொழில்நுட்பத் தகைமைப் பத்திரங்களும் அல்லது இவற்றில் எவையேனும்.

(ஈ) மேற்போந்த 4 (உ) ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனத்தில் புரிந்த சேவையை அத்தாட்சிப்படுத்தும் அத்தாட்சிப் பத்திரங்கள்

(உ) சிங்களத்தில்/தமிழில் அல்லது சிங்களத்திலும் தமிழிலும் சித்தியெய்திய ஆகக்கூடிய பரீட்சைத் தராதரப் பத்திரம்.

(ஊ) இரு நற்சாட்சிப்பத்திரங்கள்—இவற்றுள் ஒன்று கிராம சேவகரால் வழங்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

குறிப்பு.— (i) சாதனங்களையேனும் அல்லது அவற்றின் பிரதிகளையேனும் விண்ணப்பப் பத்திரத்துடன் இணைத்தனுப்பத் தேவையில்லை.

(ii) கேட்கப்படும் நேரத்தில் சாதனங்களைச் சமர்ப்பிக்கத் தவறுவோரின் விண்ணப்பங்கள் சீர்தூக்கப்படமாட்டா.

6. அபேட்சகர்கள் தமது விண்ணப்பங்களை தத்தம் பகுதி/நிலையத் தலைவர்கள் மூலம் அனுப்ப வேண்டும். விதிக்கப்பட்டுள்ள திகதிக்குப் பின் இக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளப்படும் இத்தகைய விண்ணப்பங்கள், விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அவை உரிய பகுதி/நிலையத் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டன வென்றும் நியாயமான காரணங்களைக் காட்டி அவற்றை ஏற்றுக் கொள்ளும்படி அப்பகுதி/நிலையத் தலைவர் சிபார்சு செய்தாலன்றி ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

7. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம், (II) ம் பிரிவில் வெளியிடப்படும் ; அவற்றைப் பார்க்க.

8. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி அறிவிக்கப்படும். அத்தகைய அறிவித்தலை இவ்விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 21 நாட்களுக்குள் பெறத் தவறும் அபேட்சகர்கள், கல்வி அமைச்சின் மகா வித்தியாதிபதிக்கு அது பற்றி உடனே அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் அபேட்சகர்கள் தனது உரிமை சீர்தூக்கப்படுவதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி அமைச்சு.

பொது நிர்வாகக் கிளை,
கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1970 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 11 ந் உ.

(மாதிரி விண்ணப்பப் படிவம்)

**I ம் வகுப்புத் தச்சர் பதவிக்கான விண்ணப்பம்**

தொடரெண்/5/90

1. முழுப்பெயர் (தெளிவாக) : ————.
2. நிரந்தர விலாசம் : ————.
3. சொந்த இடம் : ————.
4. விண்ணப்ப முடிவுத் திகதியன்று உள்ளபடி வயது : ————.
   பிறந்த திகதி : ————.
5. பின்வருவோர் பிறந்த இடம் :
   (அ) விண்ணப்பதாரி : ————.
   (ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
   (இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழி பாட்டன் : ————.
   (ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் : ————.
6. இலங்கைப் பிரஜையா ? அங்ஙனமாயின் வம்சாவழியினாலா பதிவு காரணமாகவா ? : ————.
7. கல்வித் தகைமைகள் :—
   (i) பொது : ————.
   (ii) தொழில் தகைமைகளும் தொழில்நுட்பத் தகைமைகளும் : ————.
   (iii) சிங்களத்தில்/தமிழில் சித்தி எய்திய ஆகக்கூடிய பரீட்சை : ————.
8. அறிவித்தலின் 4 ம் பந்தியின் (உ) ம் பிரிவில் கேட்கப்படும் சேவை விபரங்கள் (நிலையம், சேவைக்காலம், வகித்த பதவிகள் ஆகியவை குறிப்பிடப்பட வேண்டும்) : ————.
9. விவாகம் செய்தவரா, செய்யாதவரா, தாரமிழந்தவரா ? :————.
10. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் (அ) திகதி, (ஆ) வழக்கு இலக்கம், (இ) குற்றத்தீர்ப்பின் தன்மை ஆகியவற்றைக் கொடுக்கவும் : ————.
11. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு இருப்பின், எவ்வளவுக்கு : ————.
12. யுத்த சேவையில் இருந்து விலகியவராயின்—
   (அ) படைக்கூற்றின் பெயர் : ————.
   (ஆ) வகித்த பதவி : ————.
   (இ) சேர்ந்த, விலகிய திகதிகள் : ————
13. ஒழுக்க நடவடிக்கை யாதேனும் உம்மீது எடுக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் முழு விபரங்களையும் கொடுக்கவும் : ————.
14. பாடசாலையில் இருந்து விலகியதன் பின் வகித்த உத்தியோகம் :—
   (i) வகித்த பதவி : ————.
   (ii) சேர்ந்த, விலகிய திகதிகள் : ————.
   (iii) விலகியதற்கான காரணம் : ————.
15. அரசினரின் கீழ் அல்லது உள்ளூர் ஆட்சிச் சபையொன்றின் கீழ் சேவை புரிந்திருப்பின் நிரந்தர பதவியா அல்லது தற்காலிக பதவியா வகித்தீர், சேவை எந்நேரத்திலேனும் நிறுத்தப்பட்டதா ஆகியவிபரங்களையும் (அ) அத்தகைய உத்தியோகம், (ஆ) சேர்ந்த, விலகிதிகதிகள், (இ) வேலை நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள் ஆகியவற்றையும் குறிப்பிடவும் : ————.
16. தற்போதைய உத்தியோகம் : ————. நிலையம் : ————.
   (i) பதவிப் பெயரும் தரமும் : ————.
   (ii) நியமனத் திகதி : ————.
   (iii) இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதா, தற்காலிகமானதா, சமயோசிதமா ? : ————.
   (iv) தற்போதைய சம்பளமும் (சகாயப்படிகள் நீங்கலாக) சம்பள விகிதமும் : ————.
   (v) அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி : ————.
17. வேறு யாதேனும் விபரங்கள் : ————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்படுதற்குப் பின்

னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

(பகுதி/நிலையத் தலைவரின் அத்தாட்சிப் பத்திரம்)
எனது எண் :
உங்கள் எண் : பொ நி. 5/90.

நிரந்தரக் காரியதரிசி, க. அமைச்சு.

விண்ணப்பம், விண்ணப்பங்கள் முடிவடைதற்கான திகதியின்முன்/* பின் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டது.

....இலக்கப் பந்திகளில் கொடுத்துள்ள விபரங்கள் சரியானவை/* பின்வரும் திருத்தங்கள் உட்பட சரியானவை. விண்ணப்பங்கள் உங்களுக்கு அனுப்பப்படுகிறது.

அபேட்சகர் தெரிவு செய்யப்படுமிடத்து சேவையிலிருந்து அவரை விடமுடியும்/விடமுடியாது.

————,
பகுதி/நிலையத் தலைவரின் கையொப்பம்.
பதவிப் பெயர் : ————.

திகதி : ————.

*பொருத்தமற்றதைக் கீறிவிடுக.

9–771—18.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,924

---

இல. வெ.மு./2/220

## கல்வி அமைச்சு

### யப்பான் அரசாங்க புலமைப் பரிசில்கள்—1971 ஆம் ஆண்டு

பின்வரும் கற்கைகளுக்கு அல்லது இத்துறைகளிலான ஆராய்ச்சி வேலைகளுக்கு யப்பான் அரசாங்கத்தால் வழங்கப்படும் பட்டப்பின் புலமைப் பரிசில்களை அளித்தற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

எந்திரவியல், விவசாயம், கடற்றொழில், மருத்துவம், பல் மருத்துவம், பொருளியல்.

தமது பயிற்சி நெறியை பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக் கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வகுக்கப்பட்டுள்ளன.

குறிப்பு 1. புலமைப் பரிசினால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக்களத் தலைவர் 16.5.60 ந் திகதிய 514 ம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபத்துக்கிணங்க அத்தாட்சிப் படுத்தி அச்சுற்றுநிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ்வரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

குறிப்பு 2. சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமை புரிபவர்களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்படல் வேண்டும். படிவத்தின் 27 ம் கூட்டை பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவர் கேட்கப்பட வேண்டும்.

குறிப்பு 3. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஒரு விண்ணப்பமே அனுப்புவதுடன் ஒரு கற்கை நெறிக்கே விண்ணப்பிக்க வேண்டும்.

2. **கால எல்லை.**—இப்புலமைப் பரிசில்கள் 1971 ஆம் ஆண்டு ஏப்றில் மாதம் தொடக்கம் இரண்டு வருட கால அல்லது 1971 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தொடக்கம் ஒன்றரை வருடகால அளவினதாகும்.

எனினும் துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்ற காரணங்களையிட்டு யப்பான் அதிகாரிகளின் தற்றுணிபுக்கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின் போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

3. **தகவுத்திறன்.**—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் :—

(i) இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.

(ii) 1.4.1971 அன்று 35 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும். (அதாவது 2.4.36 அன்று அல்லது அதற்குப் பின் பிறந்தவர்களாய் இருக்க வேண்டும்).

(iii) விரும்பும் கற்கைத் துறையிலான பட்டப்பின் கற்கைக்குப் பொருத்தமானதும், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்டதுமான பட்டமேனும் பெற்றிருக்க வேண்டும். (பட்டப் பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்பார்த்திருப்பவர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(iv) போதனமொழி யப்பான மொழியாலகயால் யப்பான் மொழியைக் கற்கச் சம்மதமாயிருக்க வேண்டும்.

குறிப்பு 1. அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறி செய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப் பட்டுள்ள கடமைப்பாடுகளை 1.4.1971 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

குறிப்பு 2. தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனால் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்கு சம்மதமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராகார். படிவத்தின் 15 (ஈ) ம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

4. **அளிப்பு நிபந்தனைகள்.**—இப்புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும்—

(அ) யப்பானுக்கு போய்த் திரும்புதற்கு சுற்றுப்பிரயாணத்தார் வகுப்பில் விமான மூல பயணச் செலவு.

(ஆ) மாதாந்தம் 33,000 யென் உதவிப்படி.

(இ) யப்பானுக்குப் போய்ச் சேர்ந்ததும் 15,000 யென்னுக்குக் குறைந்த ஒரு தொகை சகாயப்படி.

(ஈ) வெளிக்களக் கற்கைகளுக்கு வருடாந்தம் ஏறக்குறைய 25,000 யென் சகாயப்படி.

(உ) கற்கைக் கட்டணம், பரீட்சைக் கட்டணம் ஆகியவற்றிலிருந்து தவிர்வு.

(ஊ) இடவசதிகள்.

குறிப்பு.— இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

5. **நேர்முகப் பரீட்சை.**—தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில் விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டும். அந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்வித செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தராதரப் பத்திரங்கள் பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப் படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக் கூடியவராய் இருக்க வேண்டும்.

6. **உடன்படிக்கை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், யப்பான் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் :—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) இலங்கை அரசாங்கத்தின்கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும்—அரசினர் ஊழியர்களைப் பொறுத்தவரையில் சம்பளங்கள், சகாயப்படிகள் ஆதியன உட்பட) இலங்கை அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்,

7. **வைத்திய பரீட்சை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் யப்பானில் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்தற்கு வேண்டிய உடல்நலன், மனநலன் உடையவரா என பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேற வேண்டும்.

8. உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால் பயிற்சியாளர்கள் கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையராகார்.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக் கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீட்கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக்கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிவையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துகைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்படவேண்டிய விண்ணப்பங்கள் 1970 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூ. 10 பெறுமதியான முத்திரை ஒட்டப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூ. 10 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்படல் வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத்தேவை அமையும். கல்வி, உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்புதல் வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக்கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி, அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அதுபற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத்தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
10.9.1970.

9-763—18.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,924

---

(பொ. நி./30/206)

## கல்வி அமைச்சு

### தொழில் நுட்ப உதவியாளர் பதவிகள் (அமைப்பு, கணிய அளவீடு)

கல்வி அமைச்சில் தொழில் நுட்ப உதவியாளர் (அமைப்பு, கணிய அளவீடு) பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க் காணும் மாதிரிப் படிவத்துக்குச் சரியாக அமையத் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் " நிரந்தரக் காரியதரிசி (பொது நிர்வாகக் கிளை), கல்வி அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு 1970 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும். இவ்வமைச்சிலுள்ள எவ்வுத்தியோகத்தரினதும் தனிப்பட்ட விலாசத்துக்கு விணணப்பங்கள் அனுப்பப்படலாகா.

குறிப்பு.—(i) 1969 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 12 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியில் வெளியான அறிவித்தலுக்கிணங்க—தொடர் பிலக்கம் பொ. நி. 30/206—விண்ணப்பித்தவர்களும் திரும்பவும் இவ்வர்த்தமானி அறிவித்தலுக்கிணங்க விண்ணப்பிக்க வேண்டுமென் பதைக் கவனிக்கவும்.

(ii) இரு பதவிகளுக்கும் வெவ்வேறு விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்.

2. **சம்பள விகிதம்.**—இப்பதவிக்கான சம்பள விகிதம் பின்வருமாறு :–

ரூ. 2,580—11 × 120, 4 × 180 வருடாந்தம் ; வருடாந்தச் சம்பளம் ரூ. 4,620 ஐ அடைந்தபின் அப்படியில் 2 வருடம் தங்கியபின் ரூ. 4,800—3 × 180, 5 × 240—ரூ. 6,540 வருடாந்தம்.

1.10.69 தொடக்கம் காரியப்படும் ஒன்று திரட்டிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—

ரூ. 5,016—11 × 144—4 × 180—ரூ. 7,320 வருடாந்தம் : வருடாந்தச் சம்பளம் ரூ. 7,320 ஐ அடைந்தபின் அப்படியில் 1 வருடம் தங்கிய பின் ரூ. 7,500—3 × 180—5 × 240—ரூ. 9,240.

3. **நியமன நியதிகள்.**—இப்பதவிகள் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமாகும். இப்பதவியை வகிப்பவர்கள் விதவைகள், அனுதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்குக் கட்டணம் செலுத்த வேண்டும்.

4. **வயதுக் கட்டுப்பாடு.**—விண்ணப்பதாரிகள் 40 வயதுக்கு மேற்படாதவராய் இருக்க வேண்டும். ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாடு அமையாது.

5. **கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும்.**—விண்ணப்பதாரிகள்—

(i) கணிதத்திலும் (தூய அல்லது பிரயோக) பௌதிகத்திலும் சித்தியுடன் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும். அல்லது கணிதமும் (தூய அல்லது பிரயோக) பௌதிகமும் உட்பட ஆறு பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தர) பத்திரப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி, சித்தியடைந்திருக்க வேண்டும். அல்லது வேறு உயர்தர தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.

(ii) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியில் கட்டட அமைப்புப் பயிற்சி நெறியின் I ம் II ம் படிகளைச் சித்திகரமாகப் பூர்த்தி செய்திருப்பதுடன் கட்டட அமைப்பில் மூன்று வருட பகுதி நேர எந்திரவியல் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும். அல்லது வேறு உயர்தர தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.

(iii) மேற்போந்த 5 ம் பந்தியின் (i) ம், (ii) ம் உப பந்திகளில் விதிக்கப்பட்டுள்ள தகைமைகளுடன், கீழே (அ) இன் கீழ் கொடுத்துள்ள தகைமைகள் தொழில் நுட்ப உதவியாளர் (அமைப்பு, அளவீடு) பதவிகளுக்கும் (ஆ) இன் கீழ்க் கொடுத்துள்ள தகைமைகள் தொழில் நுட்ப உதவியாளர் (கணிய அளவீடு) பதவிகளுக்கும் கட்டாயமானவையாகும்.

(அ) குறைந்த பட்சம் 10 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும் ; இதில் 3 வருடத்துக்குக் குறையாத அனுபவம் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சிவில் எந்திரவியல் ஸ்தாபனத்தின் படம்வரை கந்தோரில் பெற்றிருக்கப்பட வேண்டும்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு சிவில் எந்திரவியல் ஸ்தாபனத்தில் 10 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும் ; இதில் குறைந்த பட்சம் 3 வருட அனுபவம் கணியங்களின் அளவீட்டிலும் மதிப்பீடுகள் தயாரித்தலிலும் பெற்றிருக்கப்பட வேண்டும்.

6. மேற்போந்த 5 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பெற்றுள்ளவர்களும் அரசினர் சேவையிலுள்ளவர்களுமானவர்களின் விண்ணப்பங்கள் தத்தம் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

7. அரசினர் சேவையிலுள்ள பதவிகளுக்கு அமைபவையும் அரசினர் செய்திமடலின் I ம் பகுதி II ம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளவையுமான பொது நிபந்தனைகளுக்கும் விசேட கவனம் கோரப்படுகிறது.

8. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலப் பிரதிகளையல்ல) இணைத்தனுப்ப வேண்டும் :—

(i) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் கட்டளைச் சட்டத்தின் நோக்கத்துக்காக வழங்கப்படும் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

(ii) பெற்றுள்ள ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரம் அல்லது தொழிற் தராதரப் பத்திரங்கள் அல்லது இவ்விரண்டு தராதரப் பத்திரங்களும்.

(iii) விண்ணப்பதாரியின் தகைமைகள், ஒழுக்கம், இப்பதவிக்கு நியமிக்கப்படுதற்கான அவருடைய தகுதி ஆகியவற்றைப்பற்றி சமீப காலத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட மூன்று நற்சாட்சிப் பத்திரங்கள் (ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் இவ்வுப பிரிவின் கீழ் கேட்கப்படும் நற்சாட்சிப் பத்திரங்களை அனுப்ப வேண்டியதில்லை).

குறிப்பு. தராதரப் பத்திரங்களினதும் நற்சாட்சிப் பத்திரங்களினதும் பிரதிகள் விண்ணப்பதாரிக்கு திருப்பி அனுப்பப்படமாட்டா.

9. விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அங்ஙனம் அவை பெற்றுக் கொள்ளப்பட்டதாக விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து இரண்டு கிழமைகளுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் அது பற்றி கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு (விலாசம் : பொது நிர்வாகக் கிளை, கல்வி அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2) அறிவிக்க வேண்டும்.

10. விண்ணப்பம் தொழில் நுட்ப உதவியாளர் (அமைப்பு அளவீடு) பதவிக்காயின் " தொ. உ. அ. " எனவும், தொழில்நுட்ப உதவியாளர் (கணிய அளவீடு) பதவிக்காயின் " தொ. உ. க. " எனவும் விண்ணப்பப் படிவத்தின் இடதுபக்க மேல் மூலையில் அடையாளம் இடப்பட வேண்டும்.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1970.9.10.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி அமைச்சு.

(மாதிரி விண்ணப்பப் படிவம்)

**தொழில் நுட்ப உதவியாளர் பதவிகள் (அமைப்பு, கணிய அளவீடு)**

1. முழுப்பெயர் : ————.
(தெளிவாக எழுதவும்)

2. விலாசம் : ————.

3. விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளபடி சரியான வயது :
வரு : ———. மா : ———. நா :———.
பிறந்த திகதி : ————.
(பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்)

4. நீர் ஒரு இலங்கைப் பிரசையா ? அப்படியாயின் வம்சாவழியாகவா அல்லது பதிவு காரணமாகவா ? :————.
பின்வருவோர் பிறந்த இடம் :—
(அ) விண்ணப்பதாரி : ————.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப் பாட்டன் : ————.
(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன : ————.

5. விண்ணப்பதாரி விவாகஞ் செய்தவரா விவாகம் செய்யாதவரா, தாரமிழந்தவரா : ————.
(விவாகம் செய்தவராயின் விவாகத் திகதியையும் பிள்ளைகளின் எண்ணிக்கையையும் குறிப்பிடவும்)

6. பெற்றுள்ள ஆகக்கூடிய கல்வித் தராதரங்கள் : ————.
(தராதரப் பத்திரங்களின் பிரதிகளை இணைக்கவும்)
பின்வரும் மொழிகளில பெற்றுள்ள அறிவு :
(i) சிங்களம் : ————.
(ii) தமிழ் : ————.
(iii) ஆங்கிலம் : ————.

7 பெற்றுள்ள தொழிற் தராதரங்களும் தொழில் நுட்பத் தராதரங்களும் ; யாதேனும் இருப்பின் : ————.
(தராதரப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்)

8. விசேட தராதரங்கள், பயிற்சி, அனுபவம் பற்றிய விபரங்கள் : ———.

9. பாடசாலையிலிருந்து வெளியேறிய பின் வகித்த உத்தியோகங்களும் உரிய திகதிகளும் : ————.

10. நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கியுள்ள பிரபல்யம் வாய்ந்த மூன்று ஆட்களின் பெயர்களும் பதவிப் பெயர்களும் : ————.

11. உமக்கு பணமுட்டு யாதேனும் இருக்கிறதா ? அப்படியிருப்பின் உமது பணமுட்டு எவ்வளவுக்கு : ————.

இவ்விண்ணப்பத்தில் கொடுபட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவையுமென நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன். இவற்றில் எவையேனும் உண்மையற்றவை அல்லது பிழையானவை என நான் தெரிவு செய்யப்படுதற்கு முன் காணப்படின் தகுதியற்றவராக்கப் படுதற்கும் தெரிவு செய்யப்பட்டபின் காணப்படின் சேவையிலிருந்து எவ்வித நஷ்ட ஈடுமின்றி விலக்கப்படுதற்கும் நான் பாத்திரராவேன் எனவும் அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

9–769—18.9.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,924

---

## கல்வி அமைச்சு

**விஞ்ஞானப் பட்டப் பரீட்சைப் பெறுபேற்றை எதிர்பார்த்திருப்பவர்களை சிங்கள மொழி மூலப் பாடசாலைகளிற் சேர்த்தல்**

சிங்கள மொழி மூல அரசினர் பாடசாலைகளில் உதவி ஆசிரியர்கள் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் (ஆண்/பெண்) இரு பாலாரிடமுமிருந்து கோரப்படுகின்றன.

2. கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் 1970 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 10 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் " நிரந்தரக் காரியதரிசி, (பாடசாலைகள் நிருவாகக் கிளை), கல்வி அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் காகித உறைகளின் இடதுபக்க மேல் மூலையில் " விண்ணப்பம்—விஞ்ஞானப் பட்டப் பரீட்சைப் பெறுபேற்றை எதிர்பார்த்திருப்பவர் " எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

3. **சம்பளமும் சகாயப்படிகளும் :**

(i) 1.10.69 க்கு முன்னுள்ள ஒத்த சம்பள அளவுத் திட்டம் :
ரூ. 1,344—18 × 72—3 × 120—3,000 வருடாந்தம்.

(ii) ஒன்று திரட்டிய சம்பள அளவுத்திட்டம் :
ரூ. 3,450—19 × 90—3 × 144—5,592 வருடாந்தம்.

விவாக சகாயப்படி விதிக்கப்பட்ட விகிதங்களின் பிரகாரம் வழங்கப்படும்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் :

(அ) 10.10.1970 அன்று 45 வயதுக்கு மேற்படாமலும் 18 வயதுக்குக் குறையாமலும் இருக்க வேண்டும். (ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின், மேலெல்லை அமையாது)

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு சர்வகலாசாலை இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிப் பெறுபேற்றை எதிர்பார்த்திருப்பவராக இருத்தல் வேண்டும்.

(இ) பின்வரும் பாடங்களில் குறைந்தது இரண்டு பாடங்களாவது பட்டப் பரீட்சைக்கு எடுத்தவராக இருத்தல் வேண்டும் :—
(i) பௌதிகம்
(ii) இரசாயனம்
(iii) தாவரவியல்
(iv) விலங்கினவியல்
(v) தூய கணிதம்
(vi) பிரயோக கணிதம்.
(vii) பூகர்ப சாஸ்திரம்

(ஈ) க. பொ. த. (சாதாரணதர) வகுப்புகளில் சிங்கள மொழி மூலம் கற்பிக்கக்கூடியவராய் இருக்க வேண்டும். க. பொ. த. (சாதாரணதர) ப பரீட்சையில் பயிற்சிச் சிங்களத்தில் அல்லது அரசினர் ஊழியர்களுக்கான (iv) ஆந் தராத் தேர்ச்சிப் பரீட்சையில் சித்தி எய்தியவர்கள் மாத்திரமே விண்ணப்பிக்கலாம்.

(உ) சிறந்த நல்லொழுக்கம் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஊ) தீவின் எப்பகுதியிலும் கடமையாற்றுதற்கு ஆயத்தமாயிருப்பது டன் அதற்கான உடல் தகுதி உடையவராயும் இருக்க வேண்டும்.

5. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வருவனவற் றின் பிரதிகளை இணைத்தல் வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. க: ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டத்தின் நோக்கத்துக்காக வழங்கப்படும் பிறப்புச் சாட்சிப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

(ஆ) ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரமும் சிங்கள மொழியில் சித்தியடைந்த ஆகக்கூடிய பரீட்சைத் தராதரப் பத்திரமும்.

(இ) இரண்டு நற்சான்றுப் பத்திரங்கள்—இவற்றுள் ஒன்று விண்ணப்ப தாரி வசிக்கும் பிரிவுக்காரியாதிகாரியிடமிருந்து பெற்றுக் கொள் ளப்பட்டதாக இருக்க வேண்டும்.

6. அரசினர் சேவையில் உள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங் கள் அவர்கள் கடமை புரியும் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

7. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்**

(i) இப்பதவிகள் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடை யதுமாகும்.

(ii) நியமிக்கப்படுபவர் இளைப்பாற்றுச் சம்பளத் திட்டத்துக்குக் கட்டணம் செலுத்த வேண்டும். நியமிக்கப்படும் ஆண்கள், கைம்பெண், அனுதை இளைப்பாற்றுச் சம்பள நிதிக்குக் கட்டணம் செலுத்த வேண்டும்.

(iii) நியமிக்கப்படுபவர், ஏற்கனவே அரசினரின் கீழ் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியில் இல்லாதிருப்பின் 3 வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் நியமிக்கப்படுவர். அரசினரின் கீழ் நிரந்தரமானதும் இளைப் பாற்றுச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியை வகிப்பவர் நியமிக்கப்படுமிடத்து அவர் 1 வருட காலத்துக்கு பதில் பதவி யாளராக நியமிக்கப்படுவர்.

(iv) தெரிவு செய்யப்படுபவர் தீவின் எப்பகுதியிலேனும் கடமையாற்ற வேண்டும்.

(v) நியமிக்கப்படுபவர் அரசினரால் ஏற்கனவே ஆக்கப்பட்ட விதி களுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை, குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசினர் கரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்தற் பொருட்டு இனிமேல் ஆக்கப்படும் விதிகளுக்கும் அமைய ஒழுக வேண்டும்.

8. விண்ணப்பங்களும் விண்ணப்பங்கள் தொடர்பான எக்கடிதங் களும் நிரந்தரக் காரியதரிசிக்கே அனுப்பப்பட வேண்டும். இப்பகுதியின் எவ்வுத்தியோகத்தரின் பெயருக்கும் இவை அனுப்பப்படலாகாது.

9. இச்செய்திமடலின் I ம் பகுதி II ம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ள வையும் அரசினர் சேவையில் உள்ள பதவிகளுக்கு அமைபவையுமான பொது நிபந்தனைகளையும் விண்ணப்பதாரிகள் கவனிக்க வேண்டும்.

10. விதிக்கப்பட்டுள்ள திகதிக்குப் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. விண்ணப்பங்கள் தபாலில் இடப்பட்டபின் ஏற்படக்கூடிய தாமதத்தைத் தவிர்க்குமுகமாக விண்ணப் பங்களை நேரகாலத்துடன் அனுப்புமாறு விண்ணப்பதாரிகளுக்கு ஆலோ சனை கூறப்படுகிறது.

பி. உடகம,
நிரந்தரக் காரியதரிசியும்
மகாவித்தியாதிபதியும்.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
11.9.1970.

(மாதிரி விண்ணப்பப் படிவம்)

**விஞ்ஞானப் பட்டப் பரீட்சைப் பெறுபேற்றை எதிர்பார்த்திருப்பவர்களுக் கான உதவி ஆசிரியர் பதவிகளுக்குரிய விண்ணப்பம்**

1. முழுப்பெயர் : ————.
2. விலாசம் : ————.
3. பால் : ————.
4. விவாகஞ் செய்தவரா செய்யாதவரா : ————.
(விவாகஞ் செய்தவராயின் கணவன்/மனைவி அரசாங்க உத்தி யோகத்தரா ?) : ————.
(விபரம் தருக)
5. விண்ணப்பதாரி பிறந்த திகதி : ————.
6. பின்வருவோர் பிறந்த இடம் :
(அ) விண்ணப்பதாரி : ————.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் : ————.
(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் : ————.
7. (அ) சாதியம் : ————.
(ஆ) இலங்கையராயின் வம்சாவழியாகவா பதிவு காரணமாகவா ? : ————.
8. கல்வித் தகைமைகள் :
(i) பட்டப் பரீட்சைப் பெறுபேற்றை எதிர்பார்த்திருப்பவரா ? : ————.
(ii) பட்டப் பரீட்சைப் பாடங்கள் : ————.
(iii) சர்வகலாசாலை : ————.
(iv) வருடம் : ————.
9. சிங்களத்தில் பெற்ற தகைமைகள் : ————.
10. தொழிற் தராதரங்கள் ஏதும் இருப்பின் : ————.
11. முன்னைய உத்தியோகம் : ————.
(i) ஆசிரியராயின்—
(அ) பதிவு இலக்கம் : ————.
(ஆ) சேவை விபரம் : ————.

| பாடசாலைப் பெயர் | இருந்து | வரை | வகித்த பதவி |
|---|---|---|---|
| ———— | ———— | ———— | ———— |

(ii) வேறு அரசினர் உத்தியோகமாயின்—

| வகித்த பதவி | இருந்து | வரை |
|---|---|---|
| ———— | ———— | ———— |

12. ஆசிரியராக/அரசாங்க உத்தியோகத்தராக சேவையை முடித்தல்/ நிறுத்தல்/விலகுதல்/விடுவித்தல் ஆகியவற்றிற்கான காரணம் (முழு விபரங்களும் தருக) : ————.

மேலே கொடுத்துள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவை யும் என நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன். மேலும், நான் அரசினர் சேவையிலிருந்து நீக்கப்படவில்லை அல்லது பதவியை விட்டு நீங்கியதாக என்மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் நான் வம்சாவழியினுல்/பதிவினுல் இலங்கையரெனவும், இத்தீவின் எப்பகுதி யிலும் கடமையாற்றத் தயாராக உள்ளேனெனவும் உறுதிப்படுத்து கிறேன். இத்துடன் இவற்றில் எவையேனும் உண்மையற்றவை அல்லது பிழையானவையென நான் தெரிவ செய்யப்படுதற்கு முன் காணப்படின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்டபின் காணப்படின் சேவையிலிருந்து எவ்வித நஷ்ட ஈடுமின்றி நான் விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

9–774—18.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,924

---

## கல்வி அமைச்சு

### அரசினர் ஆசிரியர் கலாசாலைகள் பயிற்சி ஆசிரியர்/ஆசிரியை பதவிகள் (சிங்களம்/தமிழ்)

மேற்குறித்த பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரி 15.5.70 ஆந் திகதிய 14,906 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விளம் பரத்துக்குக் கவனம் கோரப்படுகிறது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள் ளப்படும் திகதி 1970 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 2 ஆந் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

2. முன்னைய அறிவித்தலுக்கிணங்க விண்ணப்பித்த அபேட்சகர்கள் திரும்பவும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

பி. உடகம,
நிரந்தரச் செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2.
1970 ம் ஆண்டு செப்டெம்பர் மீ 10 ந வ.

9–770—18.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,924.

## இலங்கை இராணுவத்தில் பயிலுநர் படைப்பயிற்சி

இலங்கை இராணுவத்தில் பயிலுநர் படைப்பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பக்காரர்கள் இலங்கையில் பயிற்றப்படுவர்.

2. வெற்றிகரமாக இலங்கையில் பயிற்சிக் காலத்தைப் பூர்த்திசெய்யும் படைப்பயிற்சி பயிலுநர்கள் அரசாணை அமர்வு செய்யப்பட்டு இலங்கை இராணுவத்தின் நிரந்தரப் படையில் உத்தியோகத்தர்களாக இரண்டாவது லெப்டினன்ட் பதவியில் அமர்த்தப்பட்டு அவரவர்களின் தகுதிக்கேற்ப போர்ப்படையில் அல்லது பொது சேவைப்படையில் அமர்த்தப்படுவர்.

3. தகைமைகள் : விண்ணப்பக்காரர்கள்—

(அ) இலங்கைப் பிரசைகளாகவும்,

(ஆ) 1971.1.1 ந் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவர்களாகவும் 24 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(இ) இலங்கைக் கல்விப் பொதுத்தராதரப் பத்திரப் பரீட்சையில் (சாதாரணம்) ஆறு பாடங்களில் குறைந்தபட்சம் நாலு பாடங்களில் திறமையான சித்தியுடன் இருதடவைகளுக்கு மேற்படாமல் சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்துடன் கணிதம் அல்லது தூய கணிதம் ஆகிய பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

குறிப்பு :—பொதுத் தகைமைக்கேற்ப பௌதிகத்திலும் தூய கணிதத்திலும் திறமையான சித்தியுடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(ஈ) விவாகமாகாதவர்களாயிருத்தல் வேண்டும். பயிற்சிக்காலத்தில் விவாகமாவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

(உ) தேவைப்படும் வைத்தியப் பரிசோதனைக்கு அமைவாகவிருக்க வேண்டும். இறுதி நேர்முகப் பரீட்சைக்கு தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பக்காரர்கள் இலங்கை இராணுவத்தினுல் ஒழுங்கு செய்யப்பட்ட வைத்தியப் பரிசோதனைக்குட்பட வேண்டும்.

4. சேவை நிபந்தனைகள் :

(அ) பயிலுநர் படைப்பயிற்சியாளர்களாய் சேர்த்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பகாரர்கள் ஐந்து வருடங்கள் நிரந்தரப்படையிலும் ஏழு வருடங்கள் மேற்படையிலும் சேவைசெய்ய அனுமதிக்கப்படுவர்.

(ஆ) பயிற்சியிலிருக்கும் பயிலுநர் படைப்பயிற்சியாளரின் வருடாந்தச் சம்பள விகிதம் நியதிகளுங்கு இணங்க ரூபா 5,160/– ஆகும். பயிலுநர் பயிற்சியாள ராகவிருக்கும் காலத்தில் அவர் எந்தச் சம்பளவேற்றத்துக்கும் உரிமையுடையராகார்.

(இ) படைத்தளபதியினல் விதிக்கப்படும் பயிற்சியை இலங்கையில் மேற்கொள்ளுப்படி பயிலுநர் வேண்டப்படுவர். பயிற்சிக் காலம் ஏறத்தாள பதினெட்டு மாதங்களாகும்.

(ஈ) இக்காலத்தில் பயிலுநர் நிலை மற்றைய வரிசைப்பதவியினரைப் போன்றதாயும் இராணுவச் சட்டத்திற்குட்பட்டதாயும் இருக்கும்.

(உ) (i) பயிற்சியிலிருக்கும்போது, பயிலுநர் தாமாகவே அபேட்சகர் நிலையை விட்டுப்பிரியின் அக்காலம்வரை அவர்மீது செலவழிக்கப்பட்ட எல்லாச் செலவுகளையும் பெற்றோர் அல்லது பாதுகாவலர் இலங்கை அரசாங்கத்திற்கு கொடுத்தல் வேண்டும்.

(ii) தமது பயிற்சியின்போது கெட்ட நடத்தை காரணமாக அல்லது தமது கட்டுப்பாட்டிற்குட்பட்ட பிற காரணங்களின் நிமித்தம் அரசாணை அமர்வுபெற தகைமையற்றவர் என்று அதிகாரிகளினுல் அறிக்கை செய்யப்படின் இலங்கை அரசாங்கத்தினுல் அவரது பேரில் செலவிடப்பட்ட எல்லாச் செலவுகளையும் பெற்றோர் அல்லது பாதுகாவலர் இலங்கை அரசாங்கத்திற்கு கொடுத்தல் வேண்டும்.

(ஊ) அரசாணை அமர்வுக்கு நியமிக்கப்பட்டதும் பயிலுநராகச் சேர்ந்த பொழுது தரைப்படையின் நிரந்தரப்படையில் செய்துவந்த கடமைகளிலிருந்து விடுவிக்கப்படுவர்.

(எ) உத்தியோகத்தர்களாய் அரசாணை அமர்வு பெற்றதும் அவர்கள் இராணுவத்தில் குறைந்தபட்சம் ஏழு வருடங்கள் சேவை செய்யுமாறு எதிர்பார்க்கப்படுவர்.

(ஏ) சம்பளம், வாய்ப்புகள், சேவை நிபந்தனைகள் தொடர்பான கீழ்க்காணும் ஒழுங்குவிதிகள் இவ்வுத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும் :

(1) 1961 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ந் திகதியிடப்பட்ட 12,395 இலக்கத்தையுடைய இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு, காலத்திற்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1961 ம் ஆண்டின் இராணுவ வேதனச்சட்டக் கோவை.

(2) 1949 ம் ஆண்டு ஒக்டோபர் 10 ந் திகதியிடப்பட்ட 10,028 இலக்கத்தையுடைய இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1949 ம் ஆண்டின் உத்தியோகத்தர்களுக்கான ஒழுங்குவிதி.

(3) 1961 ம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 28 ந் திகதியிடப்பட்ட 12,680 இலக்கத்தையுடைய இலங்கை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1961 ம் ஆண்டின் தரைப்படை உபகாரச்சம்பள பணிக்கொடைச் சட்டக்கோவை.

(ஐ) சேர்க்கப்பட்டதும் பயிலுநர்கள் தமது அடிப்படைச் சம்பளத்தில் 4% விகிதத்தை தமது உதவு தொகையாக படைக்கலந்தாங்கு சேவைகளின் விதவை அனுதை உபகாரச்சம்பள நிதிக்கு வழங்குவதற்கு எழுத்துமூலமாகத் தமது சம்மதத்தைக் கொடுத்தல் வேண்டும்.

5. கீழே 6 ம் பந்தியில் காட்டியதற்கிணங்கப் பெற்றோர் அல்லது பாதுகாவலர் உறுதியுரைப் படிவத்தில் கையொப்பமிட்டு அவற்றை விண்ணப்பத்துடன் அனுப்பவேண்டும். தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் உறுதியுரைப்படிவத்தில் காட்டிய வண்ணம் இலங்கை அரசாங்கத்துடன் இந்த அபேட்சகர்கள் நியமனம் பெறுமுன் ஓர் ஒப்பந்தமுறியைச் செய்தல் வேண்டும்.

6. விண்ணப்பகாரரின் பெற்றோர் அல்லது பாதுகாவலரினுல் கையெழுத்திடப்படவேண்டிய உறுதியுரை :

(அ) ..................................................ஆகிய இலங்கை இராணுவத்தில் பயிலுநர் படைப்பயிற்சி விண்ணப்பகாரரின் பெற்றோர்/பாதுகாவலர் நானேயாவேன்.

(ஆ) மேலே கூறப்பட்ட விண்ணப்பகாரர் இலங்கையில் பயிற்சி நெறிக்காக தெரிவு செய்யப்படும் பட்சத்தில் பின்வரும் நிபந்தனைகளுக்கும் இத்தால் பொறுப்பேற்கிறேன் :—

(i) பயிற்சிக்காலத்தில் விண்ணப்பகாரருக்கு ஏற்படும் எல்லா தனிப்பட்ட செலவுகளும்,

(ii) பயிற்சியிலிருக்கும்போது மேலே கூறிய விண்ணப்பகாரர் தாமாகவே விலகினுல் இலங்கை அரசாங்கத்தினுல் விண்ணப்பகாரரின் கணக்கில் செலவிடப்படும் எல்லாச் செலவுகளையும் இலங்கை அரசாங்கத்திற்குத் திருப்பிக்கொடுப்பதற்கும்,

(iii) தமது பயிற்சியின் போது (கெட்ட நடத்தை காரணமாக அல்லது தமது கட்டுப்பாட்டிற்குட்பட்ட பிறகாரணங்களின் நிமித்தம்) அரசாணை அமர்வுக்குத் தகைமை அற்றவர் என்று அதிகாரிகளினுல் அறிக்கை செய்யப்படின் மேலே குறிப்பிட்ட விண்ணப்பகாரரின்பேரில் இலங்கை அரசாங்கத்தினுல் அவரதுபேரில் செலவிடப்பட்ட எல்லாச் செலவுகளையும் இலங்கை அரசாங்கத்திற்குத் திருப்பிக் கொடுப்பதற்கும்.

*பொருந்தாதவற்றைக் கீறிவிடுக.

————,
கையொப்பம்.

திகதி : ————.

பெயரும் விலாசமும்—(தடித்த எழுத்தில்) : ————.

————,
(சாட்சியின் கையொப்பம்)

பெயரும் விலாசமும்—(தடித்த எழுத்தில்) : ————.

திகதி : ————.

7. **மொழி தொடர்பான விதிகள்.**—தெரிவு செய்யப்படும் விண்ணப்பகாரர்கள் 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசாங்க மொழிக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கென, விசேடமாக அரசாங்க மொழி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்கனவே செய்யப்பட்ட விதிகளுக்குக்கும் அல்லது இனிமேல் செய்யப்படும் விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

8. ஏற்கனவே அரசாங்க சேவையிலிருக்கும் விண்ணப்பகாரர்கள் தமது விண்ணப்பங்களை தம் திணைக்களத்தலைவருக்கூடாகச் சமர்ப்பிக்க வேண்டும். இந்த விண்ணப்பக்காரர்கள் தெரிவு செய்யப்படின் அவர்கள் சேவையிலிருந்து விலக்கப்படுவார்கள் என்ற சான்றிதழ் ஒன்றும் சேர்த்து அனுப்பப்படல் வேண்டும்.

9. **விண்ணப்பங்கள்.**—விண்ணப்பங்கள் கீழ் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தில் எழுதப்பட்டு 1970.10.8 மத்தியானம் 12 மணிக்குப் பிந்தாமல் இராணுவத் தலைமை நிலையம், தபால் பெட்டி இலக்கம் 553, கொழும்பு என்ற முகவரியில் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பத்தையுடைய கடிதவுறையின் மேற்பக்கத்தில் " இராணுவத்தில் பயிலுநர் படைப்பயிற்சிக்கான விண்ணப்பம் " என எழுதப்படல் வேண்டும். முடிவுத்திகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப்படிவங்கள் **வழங்கப்படமாட்டா.**

10. விண்ணப்பங்கள் பின்வருவனவற்றின் பிரதிகளுடன் இருத்தல் வேண்டும் :—

(அ) பிறப்புச் சான்றிதழ்,

(ஆ) கல்வித் தகைமைகளுக்கான சான்றிதழ்,

(இ) விண்ணப்பகாரருடன் பரிச்சயமுடைய பொறுப்புவாய்ந்தவர்களினால் வழங்கப்பட்ட குறைந்தபட்சம் இரு குணச்சான்றிதழ்கள். இவற்றில் ஒன்று கடைசியாகக் கல்விபயின்ற பாடசாலையின் தலைமையாசிரியரினால் வழங்கப்பட்டதாகவிருத்தல் வேண்டும்.

11. மேலே கூறிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பகாரர்களிலிருந்து தொடக்கத் தெரிவு செய்யப்படும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பகாரர்கள் இராணுவ தளபதியினால் விதிக்கப்படும் பரீட்சைகளுக்கு உள்ளாதல் வேண்டும். இதன் பின் இறுதித் தெரிவு, தெரிவு, செயயப்பட்டவர்களிலிருந்து, பாதுகாப்பு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் நியமிக்கப்படும் தேர்வுச்சபையொன்றினால் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படும்.

13. தேர்வுச் சபைகளினால் நேர்முகப்பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பகாரர்களுக்கு அத்தகைய நேர்முகப்பரீட்சைகளின் இடம், நேரம், திகதி என்பன எழுத்து மூலம் அறிவிக்கப்படும். நேர்முகப்பரீட்சைகள் கொழும்பில் நடாத்தப்படும். இத்தொடர்பின் எவ்விதப் பிரயாணச் செலவோ அல்லது பிற செலவுகளோ இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படமாட்டாது.

எம். ஏ. ஜயவீர,<br>
பிரிகேடியர்,<br>
இராணுவத்தளபதிக்காக.

கொழும்பு,<br>
1970.9.10.

**இலங்கை இராணுவத்தில் பயிலுநர் படைப்பயிற்சிக்கான விண்ணப்பம்**

1. முழுப்பெயர் (தடித்த எழுத்துக்களில்) : ————.
2. முகவரி : ————.
3. தேசிய இனம் : ————.
   (பரம்பரைவழியான இலங்கைப்பிரசையா அல்லது பதிவுமூலம் இலங்கைப்பிரசையா என்பதைக் குறிப்பிடவும். பதிவு மூலம் இலஙகை பிரசையாயின் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிக்கவும்).
4. (i) பிறந்த திகதி : ————.
   (பிறப்புச்சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும். சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது கல்விப்பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கபபட்ட சான்றிதழ்கள் எற்றுக்கொள்ளப்படமாட்டாது) : ————.
   (ii) 1971.1.1 திகதியன்று வயது :
   வருடம் : ————. மாதம் : ————. நாள் : ————.
5. அருகாமையில் உள்ள பொலிசு நிலையம் : ————.
6. தந்தையாரின் பெயரும் தேசிய இனமும் : ————.
   (குடியுரிமை வழங்கப்பட்டவரானால் சான்றிதழின் இலக்கமும் திகதியும் கொடுக்கப்படல் வேண்டும்) : ————.
7. தாயின் பெயரும் தேசிய இனமும் : ————.
8. கீழ்க்காணும் பாடசாலை விபரங்களைத்தருக—

| பயின்ற பாடசாலையின பெயர் | சேர்ந்த திகதி | விலகிய திகதி | பொதுப் பரீட்சைகளும் சித்தியெய்திய பாடங்களும் |
|---|---|---|---|
| | | | |

9. பாடசாலையில் உடற்பயிற்சி விளையாட்டுகளில் நீர் பெற்ற தனிச்சிறப்புகள் : ————.
10. பாடசாலையில் நீர் சிறந்து விளங்கிய பிற துறைகள் : ——— —.
11. இலங்கை சுயேட்சைப்படை, இலங்கை சாரணர்படை, இலங்கை பயிலுநர்படை முதலிய சுயேச்சை நிறுவகங்களில் இருந்திருப்பின் அவற்றின் சேவை விபரம் . ————.
12. இதற்கு முன் படைக்கலந்தாங்கு சேவைகளுக்கு விண்ணப்பித்திருப்பின் அதன் முடிவு : ————.
13. பாடசாலையைவிட்டு விலகியபின் செய்த தொழில் : ————.
14. குணச்சான்றிதழ்கள் வழங்கியவர்களின் பெயரும் முகவரியும் :—
    (அ) ————.
    (ஆ) ————.
15. வேறேதேனும் பொருத்தமான விடயங்கள் : ————.

மேலே தரப்பட்ட வினாக்களுக்கு என்னால் கொடுக்கப்பட்ட விடைகள் அனைத்தும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை சரியானவையென்றும் நான் உறுதிப்படுத்துகிறேன். இராணுவத்தின் படைப் பயிற்சிக்கான எல்லாச்சேவை நிபந்தனைகளையும் வாசித்து விளங்கிக் கொண்டேன். அத்துடன் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இந்த உத்தியோகத்தர்களுக்கான சம்பளம், வாய்ப்புகள், சேவை நிபந்தனைகளையும் அறிந்துகொண்டேன்.

————,<br>
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ————.

9–723—18.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,924

## அஞ்சல் தந்தி திணைக்கள உப அஞ்சல் அதிபர் பதவி—கிடெல்லான மாநகரசபை, இரத்தினபுரி

கிடெல்லான, இரத்தினபுரி மாநகரசபை உப அஞ்சல் அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆகக் குறைந்த மாதாந்த அலவுன்ச 75 ரூபாவாகும்.

1. விண்ணப்பதாரர் இலங்கையராயும் 25.9.1970 அன்று 21 வயதுக்கு மேற்பட்டவராயும் 45 வயதிற்கு உட்பட்டவராயும் இருத்தல் வேண்டும். இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.

2. மாநகரசபைப் பிரதேசத்துள் 10 வருடத்திற்கு அல்லது அதற்குக் கூடுதலாக நிரந்தரவாசியாக இருத்தல் வேண்டும்.

3. சிரேட்ட பாடசாலை தராதரப்பத்திரப் பரீட்சையில்/கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் (சாதாரணம்) சிங்களம்/தமிழ், பாஷையும் கணிதம்/ஆரம்பகணிதம் ஆகியவற்றுடன் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவராய் இருத்தல் வேண்டும்.

4. தற்பொழுது கிடெல்லா உபஅஞ்சல் அலுவலகம் இருக்கும் பிரதேசத்தில் உப அஞ்சல் அலுவலகத்தை நிறுவுவதற்காக ஒரு தகுந்த கட்டிடம் விண்ணப்பதாரரால் வாடகையின்றி வழங்கப்படல் வேண்டும்.

5. இரத்தினபுரி, போட்லேனிலுள்ள சப்பிரகமுவா அஞ்சல் அலுவலகங்களின் பெரும்பாக அத்தியட்சரிடமிருந்து பெற்றுக்கொண்ட உரோணியோ செய்யப்பட்ட படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 25.9.1970 ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ அவரை அடையுமாறு அனுப்பப்படல் வேண்டும்.

சப்பிரகமுவ அஞ்சல் அலுவலகங்களின் பெரும்பாக அத்தியட்சரிடமிருந்து மேலதிக விபரங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

வேணன் எம். அபயசேகரா,<br>
அஞ்சல் அதிபர் நாயகமும்,<br>
தந்திப் போக்குவரத்து அதிபரும்.

9-651—18.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,924.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## அரசாங்க கேள்விப் பத்திரங்கள்—நீர்ப்பாசன இலாகா பிம்புறுத்தாவ—உப பகுதி

நீர்ப்பாசன இலாகாவில் ரூ. 15,000 க்கும் அதற்கு மேலும் உள்ள தொகைக்கும் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்களிடமிருந்தும், கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்தும், கிராம அபிவிருத்திச் சங்கங்களிடமிருந்தும் களஞ்சியப் பொருட்கள் பிம்புறுத்தாவை உப பகுதியிலுள்ள களஞ்சிய அறைக்கு வாகன மூலம் நிதியாண்டு 1970/71 ல் விநியோகம் செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் வடகிழ்ப் பகுதி, பொலநறுவைப் பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரால் 1970 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ந் திகதி வியாழக்கிழமை காலை 10 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்வியாளர் கேள்விப் பத்திரங்கட்கு விண்ணப்பிக்கும் வேளையில் தங்களது பெயரில் பதிவு செய்த குறைந்தது மூன்று லொறிகளாவது வைத்திருத்தல் வேண்டும். அதோடு, பதிவு செய்திருப்பதற்கான சான்றிதழ்களையும் 1970 ம் ஆண்டுக்கான அனுமதிப் பத்திரங்களையும் கேள்விப் பத்திரங்கட்கு விண்ணப்பிக்கும் போது நிரூபணத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

செப்ரம்பர் மாதம் 20 ந் திகதி வரையும் பிம்புரத்தாவை, பொலநறுவை, கவுடுல்ல, மின்னேரியா முதலிய நீர்ப்பாசன அலுவலகங்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளக்கூடிய பத்திரங்களில் இன்னொரு பிரதியுடன் கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கேள்விப் பத்திரங்கட்கு விண்ணப்பிக்கும் போது கேள்வியாளர்கள் தங்களது பதிவுப் புத்தகத்தையும் தற்போது நீர்ப்பாசனத் திணைகளத்தில் செய்யும் வேலையைப் பற்றியும் அதன் முன்னேற்ற வேகத்தைக் காட்டும் சான்றிதழ்களையும் சமர்ப்பிக்க வேண்டும். கேள்விப் பத்திரக் காப்புப் பணமாக ரூ. 25 கொழும்புக் கச்சேரியைத் தவிர எந்தக் கச்சேரியிலும் செலுத்திய பற்றுச் சீட்டையும் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படமுன்பு சமர்ப்பிக்க வேண்டும்.

மேலதிக விபரங்களை நீர்ப்பாசனப் பொறியியலாளர், பிம்புறத்தாவை உப பகுதி, அறலகன்வில என்னும் விலாசத்திற்கு விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

பொ. கந்தசாமி,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
பிம்புறத்தாவை.

அறலகன்வில,
மனம்பிட்டிய.
18.8.70.

9-563—18.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,924

---

## இலங்கை மின்சாரச் சபை

### கிளிநொச்சி கோட்டிளைப்பு உப மின்சார நிலையப் பிரதேசத்தில் குடிமனைகள், பண்டகசாலைக் கட்டிடம், தண்ணீர் கோபுரம் முதலியன கட்டுவதற்கான கேள்விப் பத்திரங்கள்

1970 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ம் திகதி முற்பகல் 10.00 மணிவரை கொழும்பு 2 (த. பெ. இல. 540) இலங்கை மின்சாரச் சபையின் கேள்விச்சபைத் தலைவரால் மேற்கூறிய வேலைக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விக்குரிய விண்ணப்பப் பத்திரங்கள் சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தையிலுள்ள கொந்திராத்து-சப்ளை இஞ்சினியரின் காரியாலயத்தில் பார்வைக்குக் கிடைக்கும். கேள்விப்பத்திரக் கட்டுப்பணம் ரூபா 200 உம், கிரயம் ரூபா 5 உம் வெவ்வேறாக இலங்கை மின்சாரச் சபை சிறுப்பரிடம் கட்டப்பட்டு அவரிடமிருந்து பெற்றுக் கொண்ட 2 பற்றுச் சீட்டுக்களை கொந்திராத்து-சப்ளை இஞ்சினியர் காரியாலயத்தில் காட்டி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். கேள்வி நிபந்தனைகளின்படி கட்டுப்பணமாகிய ரூபா 200 உம் திருப்பிக் கொடுக்கப்படும்.

3. பொதுவேலைத் திணைக்களம் அல்லது வேறு அரசாங்க திணைக்களங்களிலோ அல்லது அரசாங்க கூட்டுத்தாபனங்களிலோ ரூபா 3,00,000 க்கு குறையாத கட்டிட வேலைக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் மட்டுமே பதிவு அத்தாட்சி காட்டி விண்ணப்பிக்கலாம்.

4. மேற்கூறியபடி பெற்றுக் கொண்ட பத்திரங்களில் மாத்திரம் கேள்விகள் (இரண்டு பிரதி) அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப்பத்திரங்கள் 1970 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ம் திகதி பிற்பகல் 2.00 மணிவரை வழங்கப்படும்.

5. 1970 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் மேற்படி கேள்விச் சபைத் தலைவர் காரியாலயத்தில் கேள்விப் பத்திரங்கள் திறக்கும் பொழுது கேள்விக்காரர்கள் சமூகமாயிருக்கலாம்.

ரி. டபிள்யூ. மென்டிஸ்,
தலைவர்,
இலங்கை மின்சாரச் சபை.

த. பெ. இல. 540,
கொழும்பு,
1970 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 18 ந உ.

9-660—18.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,924.

---

## துறைமுக (சரக்குக்) கூட்டுத்தாபனம் அறிவித்தல்

துறைமுகத்திலுள்ள கூட்டுத்தாபன உண்டிச் சாலைக்கு (1) வாழை இலைகள் (2) விறகு (பிளந்த துண்டுகளும் கம்புகளும்) விநியோகிப்பதற்காக விலை வைக்கப்பட்ட கேள்விப் பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன. குறிப்புகளும், விபரக் கூற்றுகளும் கொழும்பு, துறைமுக (சரக்கு) க் கூட்டுத்தாபன, தலைமை நிதி முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் 23.9.70 பி.ப. 2.30 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ அவருக்குக் கிடைத்தல் வேண்டும்.

தலைமை நிதி முகாமையாளர்.

9-534—18.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,924

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### 45/46 கலன் தகரப்பீப்பாக்கள் விற்பனை

கொழும்பு 5, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், இலங்கை அடங்கிலும் இ. போ. ச. டிப்போக்களிலுள்ள 45/46 கலன் வெற்று தகரப் பீப்பாக்களையும் கழிவு எண்ணெயுடனுள்ள தகரப் பீப்பாக்களையும் ஒப்பந்தப் பிரகாரம், கொள்வனவு செய்து எடுத்துச் செல்வதற்கான கேள்விப்பத்திரங்களை 11.10.1970 ஆம் தேதி மு. ப. 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளுவார்.

வெரகெரையிலுள்ள எனது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக் கூடியதான பத்திரங்களிலேயே கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்பட வேண்டும். கேள்விப்பத்திரக் கட்டுப்பணம் (மீளப் பெறக்கூடியது) ரூபா 100/- ஆகும்.

மேலதிக விபரங்களை எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம விநியோக உத்தியோகத்தர்.

விநியோகப் பகுதி,
வெரகெரை,
பொரலஸ்கமுவை,
5.9.1970.

9-732—18.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,924

## உணவுப் பகுதி

### பாவனைக்குகந்ததல்லாத சணற் சாக்குகள் சேலைப்பைகள் கொள்வனவு செய்வதற்கான கோரிக்கைகள்

சாமேஸ் களஞ்சியத்திலும் மனிங் மாரக்கட்டிலும் இருக்கும் சுமார் 73,117 சணற் சாக்குகளும் சேலைப்பைகளும் கொள்வனவு செய்வதற்கான கோரிக்கைகள் 2.11.1970 வெள்ளிக்கிழமை பி. ப. 2.30 மணி வரை 330, யூனியன் பிளேஸ், கொழும்பிலுள்ள உணவுக் காரியாலயத்தின் கோரிக்கைச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கோரிக்கைகள் ரூபா 500 கட்டி இவ்வலுவலகத்திலிருந்து பெறும் பத்திரத்திலேயே விண்ணப்பிக்கவேண்டும். இக்கோரிக்கைகள் பற்றிய மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பொ. நடராசா,
உணவு அதிகாரிக்காக.

330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2,
10.9.1970.

9-751—18.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,924

---

## கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்—கேள்விப்பத்திர அறிவித்தல்

வாழைச்சேனையிலுள்ள கிழக்கிலங்கை கடதாசி ஆலைக்கு சிமெந்து பைகள் தயாரிப்பதற்கு 3000 நீள் தொன் சுருள்களிலுள்ள சாக் கிராப்ற் கடதாசி வழங்குவதற்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. 1970 நவம்பர் 24 ந் திகதி பி.ப. 2.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் மூடப்படும்.

கேள்விப்பத்திரப் படிவங்களும் மற்றும் ஏனைய விபரங்களும் உற்பத்தியாளர்களின்/வழங்குபவர்களின் பெயர்களும் மற்றும் விலாசங்களும் அடங்கிய விண்ணப்பம் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

356, யூனியன் பிளேஸ், கொழும்பு—2,
1970 ம் ஆடு செத்தெம்பர் மீ 3 ம் உ.

தி. ப. நாரன்பனுவ,
பொது முகாமையாளர், கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

9-737/1—18.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,924

---

## அஞ்சல் தந்தித் திணைக்களம்

### எண்ணெய் வடிகள் வழங்கல்

எண்ணெய் வடிகளை வழங்குவதற்கும் வினியோகிப்பதற்குமான கேள்விப் பத்திரங்கள், கொழும்பு 1, லோட்டஸ் வீதியில் அஞ்சல் தந்தித் தலைமை அலுவலகக் கட்டிடத்தின் 5 ம் மாடியில் உள்ள பிரதான தந்திப் போக்குவரத்துப் பொறியியலாளரினால் 1970, அக்டோபர் 10 ம் திகதியன்று மு. ப. 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கொழும்பு 1, லோட்டஸ் வீதி, அஞ்சல் தந்தித் தலைமை அலுவலகக் கட்டிடத்தின் 5 ம் மாடியிலுள்ள பிரதான தந்திப் போக்குவரத்துப் பொறியியலாளரிடமிருந்து பெற்ற பத்திரங்களில் இரட்டைப் பிரதிகளில் கேள்விப்பத்திரம் தயாரிக்கப்படல் வேண்டும். இவரிடமிருந்து சகல விபரங்களும் அறிவித்தல்களும் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களும் பரிசீலனை செய்யலாம்.

எந்த அஞ்சல் அலுவலகத்தின் அஞ்சல் அதிபரிடம் அல்லது கொழும்பு ம. த. அ. அலுவலகக் காசாளரிடம் கேள்விப்பத்திரப் பொறுப்புப் பணமாக ரூபா 50/– கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டை பிரதான தந்திப் போக்குவரத்துப் பொறியியலாளர் அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கும் கேள்விப்பத்திரதாரர்களுக்கே கேள்விப்பத்திர சாதனங்கள் 1970 அக்டோபர் 5 ந் திகதி ந. ப. 12.00 மணிவரை வழங்கப்படும்.

வி. அழகரத்தினம்,
பிரதான தந்திப் போக்குவரத்துப் பொறியியலாளர்.

9-746—18.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,924

---

## தேசிய வீடமைப்புத் திணைக்களம்

### கேள்விப்பத்திர அறிவித்தல்

பத்தரமுல்லையிலுள்ள சுபுதிபுர, ஜயந்திபுர வீடமைப்புத் திட்டங்களில் வீட்டுத் தொடர்களுக்குத் தண்ணீர் மீற்றர்களை நிறுவுவதற்காகக் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. அத்தகைய மீற்றர்கள் இத்திணைக்களத்தினால் வழங்கப்படும்.

1970 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 9 ம் தேதி, நண்பகல் 12 மணி வரை கேள்விப் பத்திரப் படிவங்கள் வழங்கப்படும். 1970 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16 ம் தேதி காலை 10 மணிவரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களை இத்திணைக்களத்து அத்தியட்சப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஐ. ஏ. சி. பெனுண்டோ,
பதில் தேசிய வீடமைப்பு ஆணையாளர்.

தேசிய வீடமைப்புத் திணைக்களம்,
கொழும்பு 2.

9-744—18.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,924

---

## தேசிய வீடமைப்புத் திணைக்களம்

நுவரெலியாவிலுள்ள கலுகலே வீடமைப்புத் திட்டத்தில் கழிவுக் குழிகளைக் கட்டுவதற்குக் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரப் படிவங்கள் 1970 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2 ம் தேதியன்று நண்பகல் 12 மணிவரை வழங்கப்படும்.

கேள்விப் பத்திரங்கள் 1970 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12 ம் தேதியன்று காலை 10.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களை இத்திணைக்களத்து அத்தியட்சப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஐ. ஏ. சி. பெர்னுண்டோ,
பிரதி ஆணையாளர்.

தேசிய வீடமைப்புத் திணைக்களம்,
கொழும்பு 2.

9-745—18.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,924

## நீர்ப்பாசன இலாகா

### பிம்புறத்தாவ உப-பகுதி

நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 35,000/- க்கும் அதற்கு மேலும் உள்ள தொகைக்கும் பதிவு செய்யப்பட்ட கொந்துறாத்துக்காரர் களிடமிருந்தும் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்தும் கிராம அபி விருத்திச் சங்கங்களிடமிருந்தும்

(1) பிம்புறத்தாவ குளத்தின் பிரதான வாய்க்காலின் அணைக்கு மைல் 1 ல் இருந்து 7 வரைக்கும் வரிப் புல் பதிப்பதற் கும் ;

(2) 1½" ம் ¾" ம் சல்லிக் கல்லு நிதியாண்டு 1970/71 ல் விநி யோகிப்பதற்கும் ஆன கேள்விப்பத்திரங்கள் வடகீழ்ப் பகுதிப் பொலன்நறுவ பெரும்பாக நீர்ப்பாசன பொறி யியலாளரால் 1970 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 16 ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணி வரையும் ஏற்றுக்கொள் ளப்படும்.

ஐப்பசி மாதம் 12 ம் திகதி வரையும் பிம்புறத்தாவ, பொலன் நறுவ, கவுடுல்ல மின்னேரியா முதலிய நீர்ப்பாசன அலுவலகங் களில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளக்கூடிய பத்திரங் களில் இன்னொரு பிரதியுடன் கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப் பட வேண்டும். கேள்விப் பத்திரங்கட்கு விண்ணப்பிக்கும் பொழுது கேள்வியாளர்கள் தங்களது பதிவுப் புத்தகங்களையும் தற்போது நீர்ப்பாசனத் திணைக்களத்தில் செய்யும் வேலையைப் பற்றியும் அதன் முன்னேற்ற வேகத்தைக் காட்டும் சான்றிதழ்களையும் சமர்ப்பிக்கவேண்டும். கேள்விப் பத்திர காப்புப் பணமாக ரூபா 50/- கொழும்புக் கச்சேரியைத் தவிர எந்தக் கச்சேரியிலும் செலுத்திய பற்றுச் சீட்டையும் கேள்விப் பத்திரங்கள் வழங்கப் பட முன்பு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களை நீர்ப்பாசனப் பொறியியலாளர், பிம் புறத்தாவ உப-பகுதி, அறலகன்வில என்னும் விலாசத்திற்கு விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

பொ. கந்தசாமி,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
பிம்புறத்தாவ.

அறலகன்வில,
மன்னம்பிட்டிய,
3.9.70.

9-596—18.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,924

---

# கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள்

## கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

### கேள்விப்பத்திர முடிவுகள்

| கோரப்பட்ட கேள்விப் பத்திரங்கள் (நீள் தொன்) | விடயம் | கேள்விப் பத்திரங்கள் முடி வடைந்த திகதி | கிடைக்கப் பெற்ற கேள்விப் பத்திரங்களின் எண்ணிக்கை | கட்டளையிடப்பட்ட தொகை (நீள் தொன்) | சித்தியெய்திய கேள்விப் பத்திரகாரர் | எந்த நாட்டின் உற்பத்தி | விலை (விலையும் கேழ்வும் நீள் தொன் ஒன்று) ரூ. ச. |
|---|---|---|---|---|---|---|---|
| 2000 | சோடா ஆஷ் | 25.5.70 | 15 (பிந்திய 2) | 2000 | கெமிக்கல் இண்டஸ்ரீஸ் கொம்பனி லிமிரெட், த. பெ. 352, கொழும்பு | இங்கிலாந்து | 386 80 |
| 100 | ரேசின் சைஸ் | 10.6.70 | 9 (பிந்திய 1) | 100 | மிற்சூ அன் கம்பனி லிமி., த. பெ. 119, ஒசாகா மத்தி, ஜப்பான் | ஜப்பான் | 1,979 15 (1970 ம் ஆண்டின விலை) 2,079 55 (1971 ம் ஆண்டின் விலை) |

356, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2,
1970 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 3 ந உ.

தி. ப. நாரனபனுவ,
பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

9-737/2—18.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,924

---

## கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

### 7.6-.70 அன்று முடிவடைந்த ஸ்ரோபோட் கேள்விப்பத்திர முடிவுகள்

| விடய இல. | விபரம் | கிடைக்கப்பெற்ற விலைக் குறிப்பீடுகள் | சித்தியடைந்த கேள்விப்பத்திரகாரர் | கட்டளையிடப்பட்ட தொகை நீ/தொ. | விலை கொ. வி. மற்றும் க. கே. நீ/தொ/ஒன்று ரூ. ச. | எந்த நாட்டின் உற்பத்தி |
|---|---|---|---|---|---|---|
| 1. | ஸ்ரோ போட், 25½"×30½"/ 1820 ஜீஎஸ்எம்/2 ருத்தல் | 11 | மெசர்ஸ். ஸ்டார் இன்டநஷனல் (சிப்ஓனர்ஸ்) லிமிடெட், நம். 77, ஹாட்வீல்ட் ரோட், இலண்டன், எஸ். டப்ளியூ. 19, ஐ. இ. | 50 | 650 58 | இந்தியா |
| 2. | ஸ்ரோ போட், 25½"×30½"/ 2730 ஜீஎஸ்எம்/3 ருத்தல் | 11 | ௸ | 10 | 650 58 | இந்தியா |

356, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2,
1970 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 6 ந உ.

தி. ப. நாரன்பனுவ,
பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

9-737/3—18.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,924

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## விற்பனைத் திணைக்களம்

கொழும்பு 10, டி. ஆர். விஜயவர்த்தன மாவத்தையிலுள்ள விற்பனைத் திணைக்களத்தின் போக்குவரவுப் பகுதியில் 1970 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 3 ம் திகதி காலை 10.30 மணிக்கு கீழ் குறிக்கப்பட்ட அரவித்த மோட்டார் வாகனங்கள் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

| பதிவிலக்கம் | | விபரம் |
|---|---|---|
| 1. ஸ்ரீ 9091 | .. | பிபாட் கொன்சல் கார் |
| 2. சீலி 2041 | .. | மொறிஸ் 1 தொன் வான் |
| 3. சீலி 535 | .. | பெற்போட் 5 தொன் லொறி |
| 4. சீலி 1771 | .. | மொறிஸ் கொம்மேசல் 5 தொன் லொறி |
| 5. சீலி 553 | .. | மொறிஸ் 1 தொன் வான் |
| 6. சீலி 1774 | .. | மொறிஸ் கொமசெல் 5 தொன் லொறி |
| 7. சீலி 1775 | .. | மொறிஸ் கொமசெல் 5 தொன் லொறி |
| 8. சீலி 5234 | .. | மொறிஸ் கொமசெல் 5 தொன் லொறி |
| 9. சீலி 1773 | .. | மொறிஸ் கொமசெல் 5 தொன் லொறி |
| 10. சீலி 6486 | .. | மொறிஸ் கொமசெல் 3 தொன் லொறி |

வாங்குபவர்கள் முழுத்தொகையையும் உடனேயே செலுத்த வேண்டும்.

கொழும்பு 1 பி. எஸ். எஸ். ஐ. கட்டிடத்தில் உள்ள விற்பனை அபிவிருத்தி ஆணையாளர் காரியாலயத்தில் மேலும் முழுவிபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

ஆர். எப். சி. த லிவேரு,
விற்பனைத் திணைக்களம், விற்பனை அபிவிருத்தி ஆணையாளருக்காக.

பி. எஸ். எஸ். ஐ. கட்டிடம்,
கொழும்பு 1, 10.9.1970.

9–749—18.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,924

---

## அஞ்சல் பிரிவு

மீண்ட கடித அலுவலகத்தில் உரிமை கோரப்படாத அஞ்சற் கட்டுக்களில் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள், கொழும்பு 3, கொள்ளுப்பிட்டி, 19 ம் ஒழுங்கை 20 ம் இலக்கத்திலுள்ள மீண்ட கடித அலுவலகத்தில், 1970 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 5 ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனவு செய்யப்படும்.

நியாயமான விலை கோரப்படாத எந்த விடயமும் விற்பனையிலிருந்து நிறுத்திவைக்கப்படும்.

எம். பி. டீ சில்வா,
அஞ்சல் அதிபர் நாயகமும் தந்திப்
போக்குவரத்து அதிபருக்குமாக.

அஞ்சல் பிரிவு,
அ. த. தலைமை அலுவலகம்,
கொழும்பு–1,
9.9.1970.

| விடய இல. | பொருட்களின் விபரங்கள் |
|---|---|
| 1. | ஒரு அந்தர் பழைய புதினத்தாள் |
| 2. | ஒரு அந்தர் பழைய புதினத்தாள் |
| 3. | ஒரு அந்தர் பழைய புதினத்தாள் |
| 4. | 40 றுத்தல் பாவனையற்ற தாள்களைக் கொண்ட 25 பைகள் |
| 5. | 40 றுத்தல் பாவனையற்ற தாள்களைக் கொண்ட 25 பைகள் |
| 6. | 100 ஆங்கில சஞ்சிகைகள் கொண்ட ஒரு கட்டு |
| 7. | ஷை |
| 8. | ஷை |
| 9. | ஷை |
| 10. | ஷை |
| 11. | ஷை |
| 12. | ஷை |
| 13. | ஷை |
| 14. | ஷை |
| 15. | ஷை |
| 16. | ஷை |
| 17. | ஷை |
| 18. | ஷை |
| 19. | ஷை |
| 20. | ஷை |
| 21. | 100 வைத்திய வெளியீடுகளும் சஞ்சிகைகளும் கொண்ட ஒரு கட்டு |
| 22. | ஷை |
| 23. | ஷை |
| 24. | 100 சமய சஞ்சிகைகள் கொண்ட ஒரு கட்டு |
| 25. | ஷை |
| 26. | ஷை |
| 27. | 100 தமிழ் சஞ்சிகைகள் கொண்ட ஒரு கட்டு |
| 23. | ஒரு கட்டு சஞ்சிகைகள் (வெளிநாட்டு பாஷைகள்) |
| 29. | 5 புத்தகங்கள் " கீ ரு காட்டேஸ் அட்வான்ஸ் அக்கவுண்ட்ஸ் " |
| 30. | ஒரு கட்டு " றீடேஸ் டைஜெஸ்ற் " (பாக் கொப்பீஸ்) |
| 31. | ஷை |
| 32. | ஷை |
| 33. | ஒரு கட்டு " றீடேஸ் டைஜெஸ்ற் " (பாக் கொப்பீஸ்) |
| 34. | ஷை |
| 35. | ஒரு தொகை 10 ஆங்கில புத்தகம் " கிம் இல் சங் வையோகிறபி " |
| 36. | ஒரு தொகை புத்தகங்கள் (பிறநாட்டு பாஷை) |
| 37. | ஒரு தொகை ஆங்கில புத்தகங்கள் |
| 38. | ஷை |
| 39. | மூன்று றேடியோ வால்ப் |
| 40. | 34 கிரமபோன் றெக்கோட்ஸ், 5 ரேப் றெக்கோட்ஸ் |
| 41. | ஒரு போத்தல் பிறண்டி, 1 சுங்கான் |
| 42. | 6 ரின் பெயின்ற் |
| 43. | 15 வைன் கிளாஸ் |
| 44. | 1 புத்தகம் கொரியா 20 வருடங்கள் படங்கள் |
| 45. | 1 தோல் கேஸ் |
| 46. | ஒரு வொலிபோல், 1 நெற், 1 நிக்கல் பிளேற்றட் கப் |
| 47. | 12 பைக்கற் வில்கின்சன் பிளேட், 12 கவ் லிங்ஸ் |
| 48. | ஒரு எவேர்சல் ரேப் கட்டர் |
| 49. | 1 கோலி பைபிள், த லிவ்விங் நியூ ரெஸ்ரமெண்ட் அண்ட் றிலியஸ் புக்ஸ் |
| 50. | ஒரு தொகை வெசாக் காட், வெசாக் லாம்புகள் |
| 51. | 2 பாவனைசெய்த பாவாடை, 2 கவுண், 1 ஸ்காவ், 1 பெண் குடை, 1 வைக்கல் தொப்பி |
| 52. | 6 சோடி பெண்கள் சப்பாத்து, 1 சோடி பிள்ளைகள் சப்பாத்து, 1 சில்லறைப் பை, ஒரு சங்கிலி |
| 53. | 2 மர வாஸ், 1 சுவர் உபகரணம், 4 கியூரியோஸ், 1 கருங்காலி யானைப்பாலம், 2 கருங்காலி யானைகள் |
| 54. | 1 மேசைக் கலண்டர், 2 சுருள் றப்பர் சீட் |
| 55. | 1 தலையணை உறை, 3 லேஞ்சி, 6 பிறேசியர்கள் |
| 56. | 1 பழைய சேட்டு, ஒரு சாறம், 1 ஆண் குடை, 1 தொப்பி, 1 இறிஸ் கத்தி, 1 கண்ணாடிக் கூடு, 1 கண்ணாடியும் கூடும், 2 சோடி சவர் கிளாஸ் |
| 57. | 25 துண்டுகள் பேபி வூலென் காமன்ஸ் |
| 58. | 25 துண்டுகள் பேபி வூலென் காமன்ஸ் |
| 59. | 24 துண்டுகள் பேபி வூலென் காமன்ஸ் |
| 60. | 20,000 பாவனை செய்யப்பட்ட முத்திரைகள் |
| 61. | ஷை |
| 62. | ஷை |

9–765—18.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,924

---

## சிவில் விமானப் பேக்குவரத்துத் திணைக்களம்

### உபயோகமற்ற பொருட்களின் பிரசித்த ஏல விற்பனை

1970 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 11 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலைய அலுவலகத்திலும், 1970 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 12 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு இரத்மலானை விமான நிலைய அலுவலகத்திலும் சில உபயோக மற்ற பொருட்களின் பிரசித்த ஏல விற்பனை நடைபெறும்.

இப் பொருட்களை விற்பனை நாளன்று முற்பகல் 9.00 மணி தொடக்கம் பார்வையிடலாம். விற்பனைக்குரிய பொருட்களின் நிரலை கொழும்பு 1, லோற்றஸ் வீதி, தபால் பெட்டி எண். 535 இல் உள்ள சிவில் விமானப் போக்குவரத்து அதிபரிடமிருந்தும், கட்டுநாயக்கா, இரத்மலானை விமான நிலையங்களிலிருந்தும் விண்ணப்ப மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

ஏலத்தில் வாங்கப்படும் பொருட்களுக்குரிய பணத்தை உடனேயே அவ்விடத்தில் செலுத்துவதுடன் அப் பொருட்களை அன்று பிற்பகல் 4.30 மணிக்கு முன்னதாக எடுத்துச் செல்ல வேண்டும்.

டபிள்யு. எல். பி. டி மெல்,
சிவில் விமானப் போக்குவரத்து அதிபர்.

கொழும்பு 1,
1970 ம் ஆண்டு செப்டம்பர் மீ 10 ந் உ.

9–752—18.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,924

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர். தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கபபடவேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**அட்டவணை—1970**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| செத்தெம்பர் .. | 4. 9.70 | வெள்ளி .. | 28. 8.70 | வெள்ளி .. | பி.ப. 3.30 |
| | 11 9.70 | வெள்ளி .. | 4. 9.70 | வெள்ளி .. | பி.ப. 3.30 |
| | 18. 9.70 | வெள்ளி .. | 11. 9.70 | வெள்ளி .. | பி.ப. 3.30 |
| | 25. 9.70 | வெள்ளி .. | 18. 9.70 | வெள்ளி .. | பி.ப. 3.30 |
| ஒற்ரோபர் .. | 2.10.70 | வெள்ளி .. | 25. 9.70 | வெள்ளி .. | பி.ப. 3.30 |
| | 9.10.70 | வெள்ளி .. | 2.10.70 | வெள்ளி .. | பி.ப. 3.30 |
| | 16.10.70 | வெள்ளி .. | 9.10.70 | வெள்ளி .. | பி.ப. 3.30 |
| | 23.10.70 | வெள்ளி .. | 16.10.70 | வெள்ளி .. | பி.ப. 3.30 |
| | 30.10.70 | வெள்ளி .. | 23.10.70 | வெள்ளி .. | பி.ப. 3.30 |
| நவெம்பர் . | 5.11.70 | வியாழன் .. | 30.10.70 | வெள்ளி .. | பி.ப. 3.30 |
| | 12.11.70 | வியாழன் .. | 5.11.70 | வியாழன் .. | ந.ப. 12.00 |
| | 20.11.70 | வெள்ளி .. | 12.11.70 | வியாழன் .. | ந.ப. 12.00 |
| | 27.11.70 | வெள்ளி .. | 20.11.70 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| திசெம்பர் .. | 4.12.70 | வெள்ளி . | 27.11.70 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| | 11.12 70 | வெள்ளி .. | 4.12.70 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| | 18.12.70 | வெள்ளி .. | 10.12.70 | வியாழன் .. | பி.ப. 3.30 |
| | 24.12 70 | வியாழன் .. | 17.12.70 | வியாழன் .. | பி.ப. 3.30 |
| | 31.12.70 | வியாழன் .. | 24.12.70 | வியாழன் .. | பி.ப. 3.30 |

அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,
கொழும்பு,
1970 ஆம் ௵ யூன் ௴ 2 ஆந் ௳

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.